# செங்கல்பட்டு நகராட்சி

# 2023–24 –ஆம் ஆண்டின்

# நிர்வாக அறிக்கை

# செங்கல்பட்டு நகராட்சி
# 2023–24–ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

**பரப்பும் அமைப்பும்**

செங்கல்பட்டு நகராட்சியின் எல்லை நத்தம், குண்டூர், செங்கல்பட்டு, மேலமையூர் பகுதி, வேண்பாக்கம் பகுதி, அனுமந்தபுத்தேரி ஆகிய ஆறு வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாகும்.

இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 6.09 சதுர கிலோ மீட்டராகும். இந்நகரம் 1886–ஆம் ஆண்டு நகராட்சியாக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அரசாணை எண்.169 உள்ளாட்சி துறை, நாள்.01.02.1972–ன் படி இந்நகராட்சி 01.4.1972 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டும், அரசாணை எண்.599 உள்ளாட்சி துறை நாள்.17.4.1984–ன் படி முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரத்தின் மொத்த மக்கள் தொகை 64,136 ஆகும்.

இந்நகரம் தேர்தல் காரியங்களுக்காகவும், நிர்வாக காரியத்திற்காகவும் ஏற்கனவே, 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு இருந்தது 1996–ஆம் ஆண்டில் நடைபெற்ற நகராட்சி தேர்தலுக்காக 1991–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்நகரத்தை மொத்தம் 33 நகர மன்ற உறுப்பினர் வார்டுகளாக பிரிக்கப்பட்டு அரசு உள்ளாட்சித் துறை 11.6.96–ம் தேதிய ஆணை எண்.135–ன் படி அங்கிகரிக்கப்பட்டது தற்போது அரசு ஆணைப் படி வார்டுகளின் எண்ணிக்கை 33 ஆகும்

**நகர மன்றம்**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் சட்டபூர்வ ஆணை எண்.27 ந.நா.மா.தே.ஆ/2011தே.பொ.2011 நாள் 11.9.2011ன்படி நகராட்சிக்கு மொத்த நகர மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 33 என நிர்ணயம் செய்யப்பட்டது. இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) 3 உறுப்பினர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்) 2 பழங்குடியினர் –1 உறுப்பினர்களுக்கும், மகளிர் (பொது) 13 உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. மீதி 14 பொது உறுப்பினர்களாகவும் ஒதுக்கப்பட்டது. இந்நகரமன்றத்திற்கான தேர்தல் கடந்த 19.02.2022–அன்று நடைபெற்றது அதன்படி 11.04.2022–ம் தேதி முதல் இந்நகர மன்றம் செயல்படுகிறது.

| | | |
|---|---|---|
| திமுக நகர்மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை | – | 22 |
| அதிமுக நகர்மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை | – | 6 |
| சுயேட்சை நகர்மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை | – | 4 |
| விடுதலை சிறுத்தை நகர்மன்ற உறுப்பினர் எண்ணிக்கை | – | 1 |
| | | 33 |

**ஆணையர்**

| வ.எண் | பெயர் | பதவி | முதல் | வரை |
|---|---|---|---|---|
| 1 | திரு.R.நாகராஜன் | பொறியாளர் (ம) ஆணையர் (பொ) | 31.03.2023 | 30.05.2023 |
| 2 | திரு.சௌந்தராஜன் | ஆணையர் (பொ) | 30.05.2023 | 19.07.2023 |
| 3 | திரு.இளம்பரிதி | ஆணையர் | 19.07.2023 | 22.09.2023 |
| 4 | திரு.சௌந்தராஜன் | ஆணையர் (பொ) | 22.09.2023 | 10.08.2023 |
| 5 | திரு.விஜயகுமார் | ஆணையர் | 10.08.203 | 31.03.2024 |

**மேலாளர்**

திருமதி. பா.சந்திரிகா, அவர்கள் 1.4.2022 முதல் 31.03.2023 மேலாளர் வரை மற்றும் திரு.கி.முருகன் 07.10.2023 முதல் 31.03.2024 யில் மேலாளர்(பொ) பணிபுரிந்துள்ளார்.

**கணக்கர்**

திரு.கோ.கீதா, கணக்கர் அவர்கள் 1.4.2022 முதல் 31.03.2023 வரை திரு.கி.முருகன் மற்றும் 07.10.2023 முதல் 31.03.2024 கணக்கராக பணிபுரிந்துள்ளார்.

**நகர் மன்றக் கூட்டங்கள்**

16.03.2022 முதல் திருமதி.ந.தேன்மொழி அவர்கள் நகரமன்ற தலைவராக பணிபுரிந்து வருகிறார். அறிக்கையாண்டில் 10 சாதாரணக் கூட்டங்களும் 2 அவசர கூட்டங்களும் 2 சிறப்பு கூட்டங்களும் என ஆக மொத்தம் 14 கூட்டங்கள் நடைபெற்றன. இந்நகரமன்றக்கூட்டங்களில் மொத்தம் 146 பொருள்கள் பரிசீலிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டன.

**பொதுப்பிரிவு**

பணியாளர்களின் விவரம்

| | |
|---|---|
| பொதுப்பிரிவு | – 25 |
| பொறியியல் பிரிவு | – 33 |
| பொது சுகாதாரப்பிரிவு | – 25 |
| நகரமைப்பு பிரிவு | – 1 |
| வருவாய் பிரிவு | – 4 |

**அறிக்கையாண்டிற்கான பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிய விவரம்**

| | |
|---|---|
| பொதுப்பிரிவு | –7514034 |
| வருவாய்ப்பிரிவு | –2677229 |
| நகரமைப்பு பிரிவு | –1539853 |
| கணினிப்பிரிவு | –1154962 |
| பொறியியல் பிரிவு | –4117179 |
| பொது சுகாதாரப்பிரிவு | –5591956 |
| 'A' பிரிவு | –10766415 |
| 'B' பிரிவு | –9565720 |
| 'C' பிரிவு | –18886589 |
| குடிநீர் பிரிவு | –6085467 |
| | 67899404.00 |

**பொது**

வரவுகளும், செலவுகளும்(வருவாய்நிதி, குடிநீர்நிதி, கல்விநிதி)

2021–22 வரவுகள் – ரூ.1528.29 இலட்சம்

2021–22 ஆண்டில் செலவுகள் – ரூ.2140.36 இலட்சம்

**கடன்**

அரசிடமிருந்து கடன் ஏதும் பெறப்படவில்லை. தற்போது 2023–24 ம் கடன் ஏதும் பெறப்படவில்லை.

**முதலீடுகள்**

அறிக்கையாண்டில் மின்சார வாரியத்தில் முதலீடு (டெபாசிட்) யாதும் செய்யப்படவில்லை.

**கணக்கு தணிக்கை**

2023–24 ம் ஆண்டின் கணக்கு தணிக்கை உதவி இயக்குனர், உள்ளாட்சி தணிக்கை துறை, காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**வருவாய் பிரிவு** ரூ.இலட்சத்தில்

| வரி மற்றும் வரியில்லா இனங்கள் | கேட்பு | வசூல் தொகை | நிலுவை தொகை |
|---|---|---|---|
| சொத்து வரி | 1024.14 | 542.33 | 481.80 |
| காலிமனை வரி | 54.98 | 23.93 | 31.05 |
| தொழில்வரி | 171.45 | 109.94 | 61.51 |
| குடிநீர் நிதி | 223.88 | 89.40 | 134.48 |
| வரியில்லா இனங்கள் | 247.15 | 125.96 | 121.19 |
| திடக்கழிவு கட்டணம் | 85.63 | 55.67 | 29.96 |

| வ.எண். | வரி தலைப்புகள் | சதவீகிதம் |
|---|---|---|
| 1 | பொது பயன்பாடு வரி | 13 |
| 2 | குடிநீர் வடிகால் வரி | 7 |
| 3 | கல்வி வரி | 2.50 |
| 4 | நூலக வரி | 10 |

சொத்துவரியுடன் திடக்கழிவு பயனாளர் கட்டணம்.

| வ. எண். | நிர்ணயிக்கப்பட்ட தொகை | காலம் | மாத கட்டணம் | வருட கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | சொத்துவரி ரூ. 500/– க்கு குறைவாக இருந்தால் அரையாண்டுக்கு | 1 மாதத்திற்கு | 10/- | 120/- |
| 2. | சொத்துவரி 501/–க்கு மேல் 1000/–க்குள் இருந்தால் | 1 மாதத்திற்கு | 20/- | 240/- |
| 3. | சொத்துவரி 1001/–க்கு மேல் 2000/–க்கு குறைவாக இருந்தால் | 1 மாதத்திற்கு | 30/- | 360/- |
| 4. | சொத்துவரி 2001 முதல் 5000/– வரை இருந்தால் | 1 மாதத்திற்கு | 40/- | 480/- |

1.4.2017 முதல் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**காலிமனை வரி**

அறிக்கை ஆண்டில் கட்டிடங்களுக்கு காலி மனை வரி கீழ்கண்ட சதவிகிதத்தில் விதிக்கப்பட்டுள்ளது,

| வ.எண். | வரி தலைப்புகள் | 01.04.2023 முதல் 30.09.2024 வரை | 01.10.2023 முதல் 31.03.2024 வரை |
|---|---|---|---|
| 1 | பொது பயன்பாடு வரி | 0.50 பைசா | 13% |
| 2 | குடிநீர் வடிகால் வரி | -- | - |
| 3 | கல்வி வரி | 0.25 பைசா | 2.5% |
| 4 | நூலக வரி | 0.25 பைசா | 10% |

**சொத்துவரி**

அறிக்கையாண்டில் 85 எண்ணிக்கை உள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

**காலிமனை வரி**

அறிக்கையாண்டில் 69 எண்ணிக்கை உள்ள கட்டிடங்களுக்கு காலிமனை வரி விதிக்கப்பட்டுள்ளது

**தொழில் வரி**

அறிக்கையாண்டில் 27 தொழில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது.

**வரியில்லா இனங்கள்**

அறிக்கையாண்டில் குத்தகை இனங்களில் 3 ஆண்டுக்கான 11 எண்ணிக்கையும் 9 ஆண்டு குத்தகை இனங்களில் 103 எண்ணிக்கைகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

**பிற வகை வரியினங்கள்**

அறிக்கையாண்டில் பிற வரியில்லா இனங்கள் வாயிலாக கீழ்கண்டபடி வருவாய் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | விளம்பர கட்டணம் | – |
| 2 | கேளிக்கை வரி | – |
| 3 | முத்திரை தீர்வை வரி | – |

கேளிக்கை வரி

அரசாணை எண். 107 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 16.10.2017ன்படி 16.6.2017 முதல் கேளிகை வரி கீழ்க்கண்ட விபரப்படி

| வ.எண். | பொருள் | பழைய திரைப்படம் | புதிய திரைப்படம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்மொழி திரைப்படம் | 7% | 8% |
| 2. | மற்ற இந்திய திரைப்படம் | 10% | 15% |
| 3. | ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழி திரைப்படம் | 14% | 20% |

என்ற சதவீதத்தில் கேளிக்கை வரி விதிப்பு செய்து வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

**சிறார்கட்கும், பள்ளி செல்லும் பிள்ளைகட்கும் அரசு சத்துணவுத் திட்டம்**

செங்கல்பட்டு நகராட்சிக்குள் உள்ள 5+9 புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மையங்கள் செயல்பட்டு வருகிறது.

பள்ளியில் பயிலும் 5+9 மற்றும் 10 முதல் 14 வரை வயது முடியவுள்ள பிள்ளைகட்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு அளிக்கப்பட்டு வருகின்றது. இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 4 பள்ளிகளில் 4 மையங்கள் இயங்கி வருகிறது. பள்ளிகளில் இயங்கும் 4 மையப் பணிகளை கவனிக்க நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்கள் ஒரு உதவியாளர்–இணைந்த–கணக்கர் பதவி தோற்றுவித்துக் கொள்ள உத்திரவிடப்பட்டது. அதன்படி ஒரு உதவியாளர் இணைந்த கணக்கர் பணிபுரிந்து வருகிறார்.

**இடவசதியும் உபகரணங்களும்**

இந்நகராட்சியில் 4 பள்ளிகள் நகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களிலேயே இயங்கி வருகிறது. 4 பள்ளி சத்துணவு மையங்களில் 1 அமைப்பாளர்களும் 2 சமையலர்கள் 2 உதவியாளர்கள் பணிபுரிகின்றனார். இத்திட்டத்தின் கீழ் 150 பிள்ளைகளும் சத்துணவு வழங்கப்படுகிறது.

**ஆரம்பக் கல்வி**

இவ்வாண்டின் ஆரம்பக் கையிருப்பு ரூ.70,49,207.18/– உள்ளது.

**பிரத்யோக பள்ளிக்கூடங்கள் மற்றும் பொது மக்கள் நூல் நிலையங்கள்**

இந்நகராட்சி பிரத்யோகப் பள்ளி ஏதும் நடத்தவில்லை இருப்பினும் நெடுங்காலமாக அரசினா் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி ஒன்று உள்ளது. இந்த அரசினா் சீர்திருத்தப் பள்ளியில் இளம் குற்றவாளி சிறுவர்களுக்கு கல்வியும் சிறு கைத்தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது இந்த ஆண்டில் 15 மாணவர்கள் உள்ளனர். கடந்த ஆண்டு 15 மாணவர்களிருந்தார்கள்.

**பொது மக்கள் நூல் நிலையம்**

இந்நகரில் செங்கல்பட்டு மாவட்ட நூலக ஆணைக்குழுவினால் பராமரிக்கப்பட்டு வரும் மத்திய நூலகம் ஒன்று உள்ளது.

**நகரமைப்பு பிரிவு**

நகரில் வீடுகளின் அமைப்பு

புதியதாக வீடுகள் கட்டுவதற்குரிய கட்டிட உரிமையாணைகள் வழங்கும் போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதி 2019–ன் கீழ் விதிகளுக்கு உட்பட்டு கட்டிடம் கட்ட வேண்டுமெனவும் மேலும் சுகாதார வசதிகளை செய்யுமாறும், பொதுநல சட்டத்தின் கீழ் உள்ள விதி முறைகளை பற்றியும் தெரிவித்து அதன் படி வீடுகளை கட்ட வேண்டுமெனவும் வலியுறுத்தப்படுகிறது. நகர எல்லைக்குள் அமைந்துள்ள 14 பூங்காக்கள் மற்றும் திறந்த வெளி இடங்களை மேம்படுத்த அரசிதழில் வெளியிட அரசுக்கு முன்மொழிவு அனுப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த வருடம் JCK நகர் பூங்கா, செங்கராயல் சிட்டி பூங்கா மற்றும் வரதராஜா நகர் பூங்காக்களை மேம்படுத்த பணி நடை பெற்று கொண்டு வருகிறது. மேலும் நகர எல்லைக்குள் அமைந்துள்ள பூங்காக்கள் மற்றும் திறந்தவெளி இடங்களை நகராட்சி பெயரில் வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் அனுமந்தபுத்தேரியில் அறிவு சார் நூலகம் அமைக்கும் பணி நடைப்பெற்று வருகிறது.

மேலும் செங்கல்பட்டு நகராட்சியில் சுற்றி உள்ள கிராம ஊராட்சிகளின் நகராட்சியுடன் சேர்த்து எல்லை விரிவாக்கம் செய்ய முன் மொழிவு இவ்வலுவலக ந.க.எண்.8717/2007/எப்1, 02.09.2021 தேதியிட்ட கடிதத்துடன் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் ந.க.எண்.3621/2021/ப.ஆ2, 03.09.2021 தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கருத்துருவின் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அவரின் வழியாக அரசுக்கு கீழ்காணும் கிராம ஊராட்சிகளை சேர்த்து கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**I.காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஊராட்சிகள்:-**

1. சிங்கப்பெருமாள் கோயில் ஊராட்சி
2. அஞ்சூர் ஊராட்சி
3. குண்ணவாக்கம் ஊராட்சி
4. வீராபுரம் ஊராட்சி
5. தென்மேல்பாக்கம் ஊராட்சி
6. புலிப்பாக்கம் ஊராட்சி
7. திம்மாவரம் ஊராட்சி
8. பழவேலி ஊராட்சி
9. ஆலப்பாக்கம் ஊராட்சி
10. மேலமையூர் ஊராட்சி
11. வல்லம் ஊராட்சி
12. ஒழலூர் ஊராட்சி
13. பட்ரவாக்கம்

**II.திருக்குழுக்குன்றம் ஊராட்சி ஒன்றிய ஊராட்சி:-**

1.திருமணி ஊராட்சி

**பொறியியல் பிரிவு**

அறிக்கையாண்டில் திரு.S.ராமசாமி அவர்கள் 26.02.2024 முதல் தற்போது வரையில் நகராட்சி பொறியாளராக பணியாற்றி உள்ளனர்.

பொறியியல் பிரிவில் நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் மின் கண்காணிப்பாளர் இப்பிரிவில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவர்களுடன் இரண்டு குழாய் பொருத்துநர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

**சாலைகள், பாலங்கள், தோனித்துறைகள் மற்றும் கட்டிடங்கள்**

இந்நகராட்சியால் கீழ்கண்ட விவரப்படி 62.115 கீ.மீ. நீளத்திற்கு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

| | | |
|---|---|---|
| அ) தார் சாலைகள் | – | 31.52 கி.மீ |
| ஆ)சிமெண்ட் சாலைகள் | – | 30.10 கி.மீ |
| இ) மண் சாலைகள் | – | 0.457 கி.மீ |

இவைகள் நீங்கலாக நகராட்சி எல்லைக்குள் 5.610 கி.மீ. நீளமுள்ள கீழ்கண்ட சாலைகள் மாநில நெடுஞ் சாலைத் துறையினரால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

1.ஜி.எஸ்.டி.சாலை

2.காஞ்சிபுரம் ஐரோடு

## மின் விளக்குகள்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விவரப்படி 4125 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டன

| | | |
|---|---|---|
| FTL | - | 3142 |
| SVL | - | 426 |
| MHL | - | 18 |
| CFL | - | 349 |
| LED | - | 190 |
| | | ---------- |
| மொத்தம் | – | 4125 எண்கள் |
| | | ---------- |

தெரு விளக்குகள் பராமரிப்பு கடந்த 15.9.1989–ஆம் தேதி முதல் நகராட்சியால் அரசு ஆணை நிலை 344 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9.6.1989–ன்படி பராமரிக்கப்பட்டு வருகிறது. தெருவிளக்குகள் பராமரிப்பு வார்டு எண் 1 முதல் 6 வரை நகராட்சி மின்பணியாளர் ஒரு மின்கம்பி உதவியாளர் நியமிக்கப்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வார்டு எண்.7 முதல் 33 வரை தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## குடி தண்ணீர் விநியோகம்

செங்கல்பட்டு நகராட்சியின் குடிநீர் வழங்கல் பணிக்காக பாலாற்றில் செயல்பட்டு வந்த மூன்று தலைமை நீரேற்றும் நிலையங்களில் திம்மாவரம் நீரேற்றும் நிலையம் முற்றிலும் தடைபட்டு நிறுத்தப்பட்டுள்ளன. திம்மாவரம் பாலாற்றில் உள்ள உறிஞ்சு பைப் லைன் புதியதாக அமைக்கவும், மீதமுள்ள இரண்டு தலைமை நீரேற்றும் நிலையமான பழவேலி பழைய திட்டத்தில் 1996–ல் 2 மற்றும் 1998 ல் 4 எண்கள் வடிநிலை கிணறுகளும், அபிவிருத்தி திட்டம் மூலம் 2006 ல் 5 எண்கள் வடிநிலை கிணறுகளும் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. தினசரி 2.00 MLD அளவுக்கே நீர் ஆதாரம் கிடைக்கப்பெறுகிறது. மேலும் மாமண்டூர் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் 2013–2014ல் புதிய திட்டம் நிர்மாணிக்கப்பட்டு தற்போது 2.30 MLD நீர் பெறப்படுகின்றது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான 50 எண்ணிக்கை ஆழ்துளைக்கிணறு மூலமாகவும், 65 எண்ணிக்கை சிறுமின்விசை கிணறு மூலமாகவும் இந்நகராட்சிக்கு தற்போது 4.5 MLD குடிநீர் பெறப்பட்டு நாள் ஒன்றுக்கு ஒருநபருக்கு 70.00 லிட்டர் என்ற அளவில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது.

## குடிநீர் தேக்கத் தொட்டிகள் விவரம்

| | | |
|---|---|---|
| ரேடியோ மலை மேல்நிலை குடிநீர் தொட்டி | – | 1,00,000 லிட்டர் |
| ரேடியோ மேல்நிலை குடிநீர் தொட்டி –1 | – | 9,00,000 லிட்டர் |
| ரேடியோ மலை மேல்நிலை குடிநீர் தொட்டி–2 | – | 3,60,000 லிட்டர் |
| ரேடியோ மலை மேல்நிலை குடிநீர் தொட்டி–3 | – | 5.40,000 லிட்டர் |
| சார் ஆட்சியர் அலுவலக வளாகம் | – | 2,00,000 லிட்டர் |
| தட்டான் மலை மேல்நிலை குடிநீர் தொட்டி | – | 3,00,000 லிட்டர் |
| பாசித்தெரு மேல்நிலை தொட்டி | – | 4,00,000 லிட்டர் |
| பெரியமணியக்கார தெரு மேல்நிலைதொட்டி | – | 4,00,000 லிட்டர் |
| சார் ஆட்சியர் வளாக மேல்நிலை தொட்டி | – | 3,00,000 லிட்டர் |
| | | ----------- |
| | | 3230000 லிட்டர் |
| | | ----------- |

## குடிநீர் இணைப்புகள் மற்றும் பொது குழாய்களின் விவரம்

அறிக்கை ஆண்டு வரை குடிநீர் இணைப்புகள் 8583 வழங்கப்பட்டுள்ளது. இதில் வீட்டு இணைப்புகள் 8278, தொழிற் கூடங்களுகான இணைப்பு ஒன்று மற்றும் வணிக கட்டிடங்களுக்கான இணைப்பு 304 அரசு கட்டிடங்களுக்கான இணைப்பு 32 ஆக மொத்தம் 8583 குடிநீர் இணைப்புகள் உள்ளது. மேலும் பொதுக் குழாய்களின் எண்ணிக்கைகள் 187 எண்கள் உள்ளது.

## குடிநீர் கட்டணம் –

வீட்டு உபயோக குழாய்களுக்கு மாதம் ரூ.60/– மற்றும் வணிக பயன்பாட்டிற்கு ரூ.200/– வசூலிக்கப்படுகிறது வீட்டு உபயோகம் அல்லாத காரியங்களுக்கு வியாபார காரியங்களுக்கும் பயன்படும் இணைப்புகளுக்கு ஒவ்வொரு ஒவ்வொரு 1000 லிட்டர் அதன் பகுதிக்கு ரூ.10/– வீதம் வசூல் செய்யப்படும். குறைந்த பட்ச கட்டணம் ரூ.200/– வசூல் செய்யப்படும் .

## குடிநீர் லாரி –

இந்நகராட்சியில் குடிநீர் லாரி (8000 லிட்டர் கொள்ளவு கொண்டது) பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் நகரத்தில் குடிநீர் தட்டுப்பாடு உள்ள இடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

## பொதுக் கிணறுகள் மற்றும் ஆழ்துளை கை பம்புகள் –

நகராட்சியால் 15 பொது கிணறுகள் மற்றும் 50 கை பம்புகள், 65 எண்ணிக்கை சிறு மின் விசை செவ்வனே பராமரிக்கப்பட்டு வருகிறது.

## மழைநீர் வடிகால்கள் –

நகரில் தெருக்களில் வடிகால் 62.87 கி.மீ நீளத்திற்கும் மற்றும் 310 சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளது. பருவமழை முன்னெச்சிரிக்கை நடவடிக்கைகாக வெள்ள பாதிப்பு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள் தூர்வாரப்பட்டு மழைநீர் வெளியேர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## பேருந்து நிலையம் –

பிள்ளையார் குளத்தில் பேருந்து நிலையம் அமைத்துக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண்.38978/72/பி5 நாள் 11.4.1973–ல் அனுமதி அளிக்கப்பட்டது. மேற்படி அனுமதியின் படி பிள்ளையார் குளம் திடலில் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 19.4.1973–ல் திறக்கப்பட்டு அன்று முதற்கொண்டு இப்பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ள பிள்ளையார் குளம் திடல் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமானதாகும். இதன் மொத்த பரப்பளவு 1.88 ஏக்கர் இந்த இடத்தை நகராட்சி 23.9.1979–ம் தேதியில் ரூ.37,700/–க்கு சொந்தமாக வாங்கி பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த பேருந்து நிலையத்தை உபயோகிக்கும் பேருந்து ஒன்றுக்கு தினம் ஒன்றுக்கு இரண்டாம் நிலை பேருந்து கட்டணம் ரூ.12/– வீதம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. 4.3.2002 நாளிட்ட அரசு ஆணை எண். எம்.ஏ,டபள்யு.எஸ்.175 உத்திரவு படியும் மேற்படி பேருந்து நிலைய கட்டணத்தை ரூ.3.00 லிருந்து ரூ.12.00 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. இதன்படி இந்நகரமன்றம் 20.3.2002–ம் தேதி தீர்மானம் எண்.196–ல்

11.3.2002 முதல் ரூ.3.00 லிருந்து ரூ.12.00 ஆக உயர்த்தி வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன் படி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஒருங்கிணைந்த நகர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இப்பேருந்து நிலையத்தை சகல வசதிகளுடன் கட்ட திட்டம் அங்கீரிக்கப்பட்டு பொதுப் பணித்துறையினரால் கட்டிடப் பணி முடிக்கப்பட்டு 15.7.1987 ஒப்படைக்கப்பட்டு மற்றும் சீரமைப்பு பணிகள் 1999 மற்றும் 2012 இல் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

**பொது சுகாதாரப்பிரிவு**

**மருத்துவமனைகள்**

இந்நகரில் கீழ்காணும் மருத்துவ நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

1.செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

2.ஜே,எஸ்.பி. ஆஸ்பத்திரி

3. ரங்கா கிளினிக்

4. பாலாஜி மருத்துவமனை

5.ஜெ.ஜெ. மருத்துவமனை

மேற்காண்பவைகளை தவிர நன்கு பயிற்சி பெற்ற தனிப்பட்ட மருத்துவர்களால் சொந்தத்தில் நடத்தப்படும் சுமார் 40 தனி மருத்துவமனைகள் (பிரைவேட் கிளினிக் ) உள்ளன. நகரிலுள்ள நோயாளிகள் பெரும்பாலானோர் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பொது மற்றும் சிறப்பு பிரிவுகளில் நோய்களுக்கு ஏற்றவாறு உரிய சிகிச்சைகளை தொடர்ந்து பெற்று வருகிறார்கள்.

**ஆடு அறுக்குமிடம்**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்குமிடம் ஒன்றுள்ளது. இங்கு அறுக்கப்படும் வெள்ளாடு அல்லது செம்மறி ஆடு ஒன்றுக்கு ரூ.25.00 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது இந்த ஆடு அறுவை சாலையின் 16.1.76–ம் தேதிய உள்ளாட்சித் துறை ஆணை எண்.45–ன் படி இந்த ஆண்டில் காந்தி பிறந்த நாள் மகாவீரர் பிறந்த நாள், திருவள்ளுவர் பிறந்த நாள் மற்றும் வள்ளலார் தினம் ஆகிய நான்கு தினங்களிலும் மூடப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி மாடு அறுவை சாலை ஏதும் நடத்தவில்லை. மேலும் இந்நகரில் தனியார்க்குச் சொந்தமான அங்காடியோ, ஆடு அறுவைசாலையோ அல்லது மாடு அறுவைசாலையோ ஏதுமில்லை.

**தொழிற்சாலைகளும், கைத்தொழில்களும்**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 249–ன் படி ஒவ்வொருக்கும் புதியதாக உரிமையாணைகள் வழங்கும் போது அவைகள் யாவும் துப்புரவு ஆய்வர்களாலும் நேரில் பார்வையிடப்படுகிறது. மேலும் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடைபெறுவதற்காக அவைகளின் பேரில் உரிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது. இந்நகரில் தொழிற்சாலைகளுக்கான இடம், சிறு கைத்தொழிலுக்கான இடம் என்று தனித் தனியாக இதுவரையில் பிரித்து வரையறை செய்யப்படவில்லை. ஆனால் நகராட்சி முழுமை திட்டத்தின்படி குடியிருப்பு, வாணிப தொழிற்சாலைப் பகுதி விவசாய பகுதி ஆகிவையாக பிரிக்கப்பட்டுள்ளது.

**கலவை எரு(கம்போஸ்டு)**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உருவாகும் மக்கும் குப்பைகள் (ஈரகழிவுகள்) முறையே நகராட்சிக்கு சொந்தமான 7 டன் கொள்ளளவு உள்ள நுண் உரக்குடில் மற்றும் 1.5 டன் கொள்ளளவு உள்ள பகுமை உரக்குடிலில் மூலமாக உரமாக்கப்பட்டு விவசாயிகளுக்கு நகர பகுதியில் வசிபவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**பிறப்பு இறப்பு புள்ளி விவரம்**

அரசு மருவத்துமனையில் ஏற்படும் பிறப்பு மற்றும் இறப்பு தவிர அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகள் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான Online மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.

ஆண்டு அறிக்கை

பிறப்பு – 866

இறப்பு – 309

**கடும் வயிற்று போக்கு** –

இவ்வாண்டில் இந்நோயினால் எவரும் இறப்பு ஏதும் இல்லை.

**டைப்பாய்டு காச்சல்**

இந்நோய்னால் இறப்பு ஏதும் இல்லை

**டெங்கு**

இந்நோயினால் இவ்வாண்டு யாரும் இறப்பு ஏதும் இல்லை

**கொரோனா**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதுமில்லை

**இதர காய்ச்சல்**

இந்நோயினால் இவ்வாண்டு இறப்பு ஏதமில்லை

**நகர சுகதாரம்** –

சுகாதாரப் பணிகள் செவ்வனே நடைபெறும் பொருட்டு இந்நகரத்தினை 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. துப்புரவு தொழிலாளர்களின் பணிகளை கண்காணிப்பதற்காக 1 துப்புரவு ஆய்வர்களும் 1 துப்புரவு பணி மேற்பார்வையாளர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

நகரில் சேரும் குப்பையை அகற்றுவதற்காக இவ்வலுவலகத்தில் குப்பை எடுக்கும் லாரி 2 உள்ளது. இந்த லாரியை–ஒட்டுவதற்காக ஒரு லாரி ஒட்டுநர் வீதம் 2 ஒட்டுநர்கள் உள்ளார்கள். டராக்டர்–1 முதலிய குப்பை எடுக்கும் வாகனமாக உள்ளது. மேலும் நாய்கள் பயண வாகனம் –1, கொசு ஒழிப்பு பயன்படும் ஆட்டோ–1 உள்ளது. இவ்வாண்டில் மொத்தம் 84 துப்புரவு தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களின் 33 நபர்கள் நகரில் உள்ள சாக்கடை கால்வாய்களை தள்ளுவதற்கும், தூக்குமரக்குட்டை நுண்ணிய உரகிடங்கிற்கு 5 நபர்களும் ராமபாளையம் நுண்ணிய உரகிடங்கிற்கு 3 நபர்களும் நெகிழி வைவிங் செய்வதற்கு 3 நபர்களும் பொது கழிப்பரைகள் 7ழிற்கு 7 நபர்களும் சமுதாய கழிப்பரைகள் 7ழிற்க்கு 7 நபர்களும் நகராட்சி பள்ளிகள் 4ன்கிற்கு 4 நபர்களும் மறு சுழற்ச்சி மையம் ஆண்டிற்கு 2 நபர்களும் நெடுஞ்சாலை சுத்தம் செய்வதற்கு 20 நபர்களும் பயன்படுத்தபடுகிறார்கள்.

பொது சுகாதார பணிகள் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.140/2023/எச்1 நாள்.28.04.2023 படி செங்கல்பட்டு நகராட்சி 1 முதல் 33 வார்டுகளிலும் தனியார் மயமாக்ககப்பட்டு 01.05.2023 முதல் செயல்பட்டு வருகிறது.

இந்நகரில் மொத்தம் 7 பொதுக் கழிப்பறைகள் உள்ளது அவற்றில் 7 சமுதாய கழிப்பறைகளும் (செப்டிக் டேங்க்) ஒரு பொதுக் கழிப்பிடமும் அடங்கும். 1.ராமபாளையம் 2. அனுமந்தபுத்தேரி, 3.கரிமேடு 4.நகராட்சி தினசரி மார்க்கேட் கட்டண கழிப்றைகள் 2 5) குண்டூர், 6) தூக்குமரக்குட்டை ஆகிய இடங்களில் உள்ளது இவற்றில் புதிய பேருந்து நிலையத்தில் ஒன்றும் செயல்படுகிறது.

இந்நகரில் சேரும் குப்பையை குப்பை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலமாக அகற்றப்பட்டது.

பொது சுகாதாரப் பிரச்சாரம்

பொது மக்களிடையே பொது நலப்பிரிவு ஊழியர்கள் மூலமாகவும் துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் திரையரங்குகளில் சினிமா சிலைடுகள் காட்டுவதின் மூலமாகவும் சுகாதாரப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டது.

உணவுக் கலப்படம்

இந்நகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலர் மூலமாக உணவு கலப்படம் மாதிரிகள் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதர பொது சுகாதார நடவடிக்கைகள்

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சேர்ந்த டாக்டர்களால் இவ்வாண்டும் இந்நகராட்சியின் பராமரிப்பிலுள்ள அனுமந்தபுத்தேரி நகர்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கு தினமும் வருகை தந்து அப்பகுதி வாழ் மக்களுக்கு இலவச வைத்திய சிகிச்சை அளித்தனர்.

தொழிற்சாலைகள்

இந்நகராட்சி எல்லையின் ஜீ.எஸ்.டி, சாலையில் ஜிப் செய்யும் தொழிற்சாலை ஒன்று மட்டுமேயுள்ளது. வேறு தொழிற்சாலை ஏதுமில்லை இந்த தொழிற்சாலைக்கு வழக்கம் போல் இவ்வாண்டில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 249–ன் கீழ் உரிமையாணை வழங்கப்பட்டு பொது நல சட்டத்தின் கீழ் தொழிற்சாலையை நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இத்தொழிற்சாலையை துப்புரவு ஆய்வர்கள் அவ்வப்போது சென்று ஆய்வு செய்து வந்தனர்.

நாளங்காடியும் ஆடு அறுவை சாலையும்

காய்கறிகள் மீன் மற்றும் மாமிச நாளங்காடிகளும் ஆடு அறுவை சாலையும் இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இவ்வாண்டும் தொடர்ந்து இருந்து வருகிறது. வழக்கம் போல் இவ்வாண்டில் இவைகள் குத்தகைக்காக பொது ஏலத்தில் விடப்பட்டன. இந்நகரில் வாரச் சந்தை ஏதுமில்லை. உரிய சுகாதார முறைப்படி இந்நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுவைசாலை ஒன்று பராமரித்து வரப்படுகிறது. மாடுகள் மற்றும் பன்றிகள் அறுப்பதற்கென அறுவைசாலை ஏதும் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

சுடுகாடும் இடுகாடும்

குண்டூர் பகுதியில் சுமார் ஏழ ஏக்கர் நிலப்பரப்பில் ஒன்றும் நத்தம் பகுதியில் பாலாற்றங்கரையோரமாக 2 ஏக்கர் 60 செண்ட் நிலப்பரப்பில் ஒன்றும் தட்டான்மலையில் ஒன்றும் உள்ளன. இவற்றை தவிர இந்நகர எல்லைக்குள் முகமதியர்களுக்கென தனியாக மத்தியில் ஒரு இடுகாடு தனியாக உள்ளது. இந்நகர எல்லைக்கு அப்பால் திம்மாவரம் கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கென இடுகாடு ஒன்று தனியாக உள்ளது. நகராட்சியில் புதியதாக பகுதி–2 திட்டத்தின் கீழ் நவீன எரிவாயு தகன மேடை ரூ.48.00 லட்சம் மதிப்பீட்டில் பழவேலி சுடுகாடு வளாகத்தில் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

<u>அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான வியாபாரிகள்</u>

இந்நகரில் உள்ள வணிகவளாகம் மற்றும் கடைகள் ஆகியவற்றை ஆய்வு செய்யப்பட்டு அதற்கான உரிமை ஆணை வழங்கப்பட்டு வருகிறது. இந்நகர எல்லைக்குள் மொத்தம் 1402 கடைகள் உள்ளது.

ஆணையர்(பொ),
செங்கல்பட்டு நகராட்சி

**செங்கல்பட்டு நகராட்சி**
**26.02.2024 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்திய தீர்மான எடுகுறிப்பு**

செங்கல்பட்டு நகராட்சியின் 2023–24 ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.393, நாள்.26.02.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

// (ஒம்) // திருமதி.ந.தேன்மொழி,
நகரமன்ற தலைவர்

**// உண்மை நகல் //**

**மேலாளர்,**
**செங்கல்பட்டு நகராட்சி**